

திருவள்ளூர் மாவட்ட ஆவடி சட்ட மன்ற அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்த இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டத்தில் பகுதிப்பட்டு கிராமத்தில் விடுபட்ட குடும்பங்களுக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை வழங்கினார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மற்றும் கே.ஜெ.ரமேஷ், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், மற்றும் அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் உள்ளனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட கெருகம்பாக்கம் ஊராட்சியைச் சேர்ந்த சென்னை புறநகர் மாவட்ட அ.தி.மு.க. ஜெ பேரவை துணைச் செயலாளரும், முன்னாள் குன்றத்தூர் ஒன்றிய குழு துணைத் தலைவருமான எஸ்.சுரேஷ் பாபு அவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்ட செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், நகர செயலாளர் பட்ரூர் எஸ்.ஜபருல்லா ஆகியோர் உள்ளனர்.

### ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தலைமை ! ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, முன்னிலை !

# சென்னை வடக்கு மாவட்ட அயலக அணி சார்பில் தண்ணீர் பந்தல் !

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ – டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, திறந்து வைக்கின்றனர் ! ஏ.டி.மணி அறிக்கை!

சென்னை, மே07

சென்னை வடக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏ.டி.மணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை வடக்கு மாவட்ட அயலக அணி சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணைமுதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆர்.கே.நகர் மேற்கு, ஆர்.கே.நகர் கிழக்கு, பெரம்பூர் வடக்கு, தெற்கு, இராயபுரம் கிழக்கு, மேற்கு, ஆகிய தொகுதியில் இன்று (07.05.2025 புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் தலைமை வகிக்கிறார். ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, மாநில அயலக அணித்தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் நீர்மோர் பந்தலை திறந்து வைக்கின்றனர்.

இதில் பகுதிச்செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், க.ஜெயராமன், அ.முருகன், இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி, மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏ.டி.மணி அறிக்கையில் கூறியுள்ளார்.

### டெல்லியில் நடைபெற்ற யோகாசனா விளையாட்டுப்போட்டியில்

# தங்கப் பதக்கம் வென்ற காஞ்சிபுரம் மாணவர்கள் !

### சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.விடம் வாழ்த்து!

காஞ்சிபுரம், மே 7

கடந்த மாதம் ஏப்ரல் 25 முதல் 27 வரை புதுடெல்லியில் நடைபெற்ற, 2 வது ஆசிய யோகாசனா விளையாட்டு சாம்பியன்ஷிப் போட்டியில், காஞ்சிபுரத்தில் இருந்து இரண்டு போட்டியாளர்கள் கலந்துக் கொண்டு தங்கப் பதக்கம் வென்றுள்ளனர். இந்தப் போட்டியில், மொத்தம் 21 நாடுகளில் இருந்து மாணவர்கள் கலந்துக் கொண்டுள்ளனர்.

அதில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து கலந்துக் கொண்ட 76 பேரில் 5 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். காஞ்சிபுரத்திலிருந்து கலந்துக் கொண்ட இரண்டு போட்டியாளர்கள் செல்வி சி. ஓவியா த/பெ. சந்திரன் (11 ஆம் வகுப்பு) மாமல்லன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம் மற்றும் செல்வன் கே. தேவேஷ் த/பெ. கிருஷ்ணகுமார் (8ஆம் வகுப்பு) சுப்பராய முதலியார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியோர் தலா இரண்டு போட்டிகளில் கலந்துக் கொண்டு இருவரும் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

காஞ்சி மண்ணிற்கு தங்கம் வென்று பெருமைச் சேர்த்த இருவரும் நேற்று (06.05.2025) காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசனைச் சந்தித்து, பதக்கம் மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் மாணவச் செல்வங்களின் பயிற்சியாளர் திரு. யுவராஜ் மற்றும் பெற்றோர் இருந்தனர். மேலும், இரண்டு வீரர்களும் 2026ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெறவிருக்கும் ஆசிய அளவிலான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

### சாதனை விளக்க பொதுக்கூட்டம் – கலைஞர் பிறந்தநாள் விழா குறித்து

# மாதவரம் வடக்கு பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் அறிக்கை

சென்னை,மே.7-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக ஆலோசனைக் கூட்டம்,மாத்தூர் எம்.எம். டி.ஏ. 19வது வட்டம் மாத்தூர் எம்.எம். டி. ஏ. இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் அவர்களின் அறிவுறுத்தலின்படி,08.05.2025 வியாழக்கிழமை அன்று மாலை சரியாக 5 மணிக்கு துவங்கும் இக்கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் வி. திராவிட வீரன் தலைமை தாங்குகிறார்.

19வது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்புரை ஆற்றுகிறார். பகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், எஸ். கௌரி, ஆர்.முரளி, கவுன்சிலர் க.காசிநாதன், பி. தரணி, பி. நிர்மல் குமார், கே. செல்வன், நா. மோகன் குமார் நாகூரார், வி. கார்த்திகேயன், பா. சந்திரன், கே. ராஜா, வட்ட செயலாளர்கள் கே.அங்குசாமி, இ. கண்ணப்பன், கே. கருணாகரன், பி.எஸ், சந்துரு, வி.ஆர். குப்பன், நந்தினி சண்முகம் ஆகியோர் முன்னிலை வைக்கிறார்கள்.

கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம், ஜுன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை செய்ய நடைபெறும் இக்க கூட்டத்தில், மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், பொது உறுப்பினர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு திரு.வி.க நகர் மண்டலம், வார்டு–73, நாச்சாரம்மாள் கோவில் தெருவில், மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.32.45 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மைய கட்டடத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ., மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே. பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர் ச. அம்பேத் வளவன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில் நடைபெற்ற, 2 வது ஆசிய யோகாசனா விளையாட்டு சாம்பியன்ஷிப் போட்டியில், காஞ்சிபுரத்திலிருந்து கலந்துக் கொண்டு தங்கப் பதக்கம் வென்ற இரண்டு போட்டியாளர்கள் சி.ஓவியா, கே. தேவேஷ் ஆகியோர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.வைச் சந்தித்து, பதக்கம் மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உடன், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், மாணவச் செல்வங்களின் பயிற்சியாளர் யுவராஜ் மற்றும் பெற்றோர் இருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# "அன்னம் தரும் அமுதகரம்" 76வது நாள்!

### துறைமுகம் கிழக்கு – மேற்கு பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,மே.7-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 76 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (06.5.2025) துறைமுகம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 56அ - சாலை விநாயகர் கோயில் தெரு அருகில், பிராட்வே, சென்னை. 2) துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 59அ - பாபா கோயில் அருகில், எல்லீஸ் ரோடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S. முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை எம்.சி. கோ.சு.மணி பங்கேற்பு

# தியாகராயர்நகர் 131 அ வட்டத்தில் தண்ணீர் பத்தல்கள் திறப்பு!

### வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்

சென்னை, மே 7 -

தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி 131 அ வட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

சென்னை தென்மேற்கு மாவட்ட தியாகராய நகர் கிழக்குப் பகுதி 131அ வட்டம் சார்பில்

தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு தண்ணீர் பந்தல் அமைக்கும் நிகழ்ச்சி நாளை (08.05.2025 வியாழக்கிழமை) 131அ வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் கீழ்க்கண்ட இரண்டு இடங்களில் நடைபெற உள்ளது.

கர்ணன் தெரு, சாமியார் மடம் எதிரில், நேரம் காலை 11 மணிக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கே.எல்.சிவானந்தம் நிகழ்ச்சி ஏற்பாட்டில் திறந்து வைக்கப்படுகிறது.

மேலும் அறிஞர் அண்ணா பொது நல மன்றம் சார்பில் ஆற்காடு சாலை, வடபழனியில் காலை 11:30 மணி அளவில் எம்.விஜயகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் திறந்த வைக்கப்படுகிறது.

இந்த இரண்டு நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ கே.ஏழுமலை எம்.சி ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பழங்கள் மோர் வழங்கி திறந்து வைக்கின்றனர். மேலும் கோ.சு மணி உட்பட கழக முன்னணியினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.


இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், மகளிர் அணி இளைஞரணி உட்பட அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி கழக துணை அமைப்பாளர்கள் பாக முகவர், உறுப்பினர் உட்பட கழக முன்னணியினர் தவறாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சென்னை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர்

# பா.அருண்குமார் தாயார் திருமதி. பா.மல்லிகா மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, மே 7 -

சென்னை தெற்கு மாவட்டம் 181 வது வட்டம் கொட்டிவாக்கம் அவைத் தலைவரும் முன்னாள் ஒன்றிய கவுன்சிலருமான பெ.பார்த்தசாரதியின் மனைவியும் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் பா.அருண்குமாரின் தாயார் திருமதி. பா.மல்லிகா நேற்று (06-05-2025) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து அவரது உடலுக்கு கழகத்தினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம், எண்.1/32, கிழக்கு கடற்கரை சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600041 அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு 07.05.2025 இன்று காலை 09.00 மணியளவில் கொட்டிவாக்கம் ஈடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### கழகப் பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலை

# அம்பத்தூர் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

### டி.எஸ்.பி.இராஜகோபால் தலைமை! ஆவடி பாஸ்கர் சிறப்புரை!

சென்னை, மே 7

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் பல்லாண்டு!! சாதனை விளக்க பொதுக் கூட்டம் நாளை (08.05.25 வியாழக்கிழமை) மாலை 6.00 மணிக்கு பாடி யாதவாள் தெருவில் அம்பத்தூர் தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் மக்களவை தலைவர் டி.ஆர்.பாலு, மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டல குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி முன்னிலை வகிக்கிறார்கள்.

பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ், எல்.பி.எப்.மோகன், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர் ஜி. சாந்தகுமாரி, ஜெ. பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி, கு.கிருஷ்ணமூர்த்தி, து. ஆயிரம், மு.நடராஜன், து.செல்வராஜ் ,ஆர். கதிரவன், கவிதாசெல்லதுரை, கு. சங்கர், வட்டக் கழகச் செயலாளர்கள்:

சி. சீனிவாசன், சேகர், ந.நெப்போலியன், இரா.டீக்கா, மாமன்ற உறுப்பினர்கள் எஸ். உமா, உஷா நாகராஜ், கே.பொற்கொடி, எம். கமல், மாவட்ட பிரதிநிதிகள்: பொ. சேதுராமன் (எ) பொன் சேட்டு, ஏ. கே.டி. பாஸ்கர், பா. மாறன், டி. சுரேஷ் பாபு, ஆர்.ஜெயராமன், சோ.மதியழகன், எஸ்.கே.சதீஷ்குமார், எஸ். எஸ். சவரிமுத்து, எஸ். எம்.முருகானந்தம், ஏ.வி. தட்சிணாமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

தலைமைக் கழக பேச்சளார் ஆவடி பாஸ்கர் சிறப்புரை யாற்றுகிறார்.

கழகத் துணை அமைப்புச் செயலாளர் ப. தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., அம்பத்தூர் தொகுதிப் பொறுப்பாளர் சன். முனியாண்டி ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

கழக மாநில நிர்வாகிகள் ப. ரங்கநாதன், கே. சந்துரு, கே. எஸ். ரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ். மணிமுடி, வே. உமாகாந்த், கே.எஸ். எம். நாதன், எம். விஜயகுமார், என். பி. எம் ஷேக்அப்துல்லா, சி. மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி, ஆர்.வரதன் மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி. மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், மண்டல குழு தலைவர்கள் கூ.பீ. ஜெயின், சரிதா மகேஷ்குமார்,ஸ்ரீ ராமலு,

பகுதி செயலாளர்கள் வே. வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், எ. நாகராசன், சொ. வேலு, வி. சுதாகர், எம். சாமிகண்ணு, செ. தமிழ்வேந்தன், எஸ். ராஜசேகர், எஸ். முரளி, பொதுக் குழு உறுப்பினர்கள் கோ. மணி, எஸ். பன்னீர்செல்வம், டி. வி. செம்மொழி, பி.ஜெ. துளசிங்கம், பி. உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், எம். இப்ராஹிம்கனி, அ. நிர்மலாதேவி, இரா. கலைச்செல்வி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் சி. மகேஷ்குமார், டி. லோகேஷ், பா. ஜெகதீஷ், க. வினோத், ஜி. ஜெ. பிரபு, எஸ். தனசேகர், ஆர்.டி. சங்கர் நானா, வானவில்விஜய், நா. துலுக்காணம், ஜி. தாமோதரன், துரை கண்ணன், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், பி. விஜயகுமார், எம். பெரோஸ்கான், எம். விநாயகம், ஆர். எஸ். சித்திக், க. பா. பிரதீப்குமார், ம. அசோக்குமார், எல், சம்பத்குமார், கா. ராஜ்முகமது. இரா. வீரமணி,

அம்பத்தூர் வடக்கு, கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் வி. ரவீந்திரன், பு. வீரா, வெ. ராதா கிருஷ்ணன், மு. ரகு, த, கண்ணபிரான், மு. சண்முகம், ஆ. சுந்தர்ராஜ், சீ. லோகநாதன், சு.மோகன் குமார், மு. விஜயகுமார், த. வ. லால் , அம்பத்தூர் வடக்கு, கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.செல்வம், க.முரளிபாபு, க. கதீஜா, மா. ரமேஷ், து. ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ.ராமு, மாவட்ட பிரதிநிதிகள்: பொன். நவராஜ்ரவி, எம். குணசேகரன், ப.மதி, ஆ.இரா.அருண், கோ.சேகர்லால், க.ஜீவா, எஸ்.பி. அரிகிருஷ்ணன், மா. குப்புசாமி, எம். ஹரிகிருஷ்ணன், பி.வி.மூர்த்தி, கே.செல்வம்,கோ.முத்துக்குமாரசாமி, கோ. ராஜ்குமார், ந. குமரவடிவேல், ச. கோதண்டன், கோ. இன்பசேகரன், ஆர். விமலன், ஜெ.ஐயப்பன், எஸ். பரமசிவம், தொகுதிக்குட்பட்ட பி.எல். 2பாகநிலை முகவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துக்கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர் த.பிரகாஷ் குமார் நன்றி கூறுகிறார்.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் உள்ள காந்தி சாலையில் கழக அரசின் ஐந்தாம் ஆண்டின் தொடக்கத்தை முன்னிட்டு கழக செயல்வீரர் என்.மணிமாறன் அவர்களின் ஏற்பாட்டில் 177வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன் தலைமையில் நீர்மோர் பந்தலை வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அசன் மௌலானா திறந்து வைத்து, நீர்மோர் பழரசம் ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் சு.சேகர், பகுதி தலைவர் பி.ரவி, 175 அ வட்ட கழக செயலாளர் சக்திவேல், காங்கிரஸ் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.